[25th March 1958

Elementary schools.

* 394 *Q.*—Sri P. G. MANICKAM: Will the Hon. the Minister for Finance be pleased to state—

(*a*) the number of elementary schools in the Talavadi firka, Coimbatore district;

(*b*) the number of students, boys and girls, studying in these schools; and

(*c*) the number of Harijan boys and girls among them?

The Hon. Sri C. SUBRAMANIAM: (*a*) 30

(*b*) Boys 932
Girls 378.

(*c*) Boys 110
Girls 88.

Sri P. G. MANICKAM: தாலவடி பிர்க்காவில் 22 கிராமங்கள் இருக்கின்றன. இன்னும் அநேக கிராமங்களில் பள்ளிக்கூடம் ஏற்படுத்தப் படாமல் இருப்பதாகத் தெரிகிறது. அத்துடன் லோக்கல் டெவலெப்மெண்ட் ஸ்கீமில் 12 இடங்களில் பள்ளிக்கூடங்கள் கட்டுவதாகத் தெரிகிறது. ஆனால் அங்குள்ள மக்கள் ஏழைகளாக இருப்பதினால் அவர்களால் பள்ளிக்கூடம் கட்ட நன்கொடை கொடுக்க முடியாமல் இருப்பதால் அதையும் இலவசமாகக் கட்டிக் கொடுக்க முயற்சி செய்வார்களா ?

The Hon. Sri C. SUBRAMANIAM: 22 கிராமங்கள் இங்கு இருப்பதாகச் சொன்னார்கள். இப்பொழுது இங்கு ஏற்படுத்தப்பட்டிருக்கும் பள்ளிக்கூடங்கள், 30. லோக்கல் டெவலெப்மெண்ட் ஸ்கீமைப் பற்றி தனியாக கேள்வி போட வேண்டும்.

Sri G. G. GURUMURTHI: இருக்கிற பள்ளிக்கூடங்களில் போதுமான ஆசிரியர்கள் இல்லாதது அரசாங்கத்திற்குத் தெரியுமா ? அப்படியானால் கூடுதல் ஆசிரியர்களை நியமிக்க ஜில்லா போர்டுக்கு உத்தரவு அனுப்புவார்களா ?

The Hon. Sri C. SUBRAMANIAM: ஜில்லா போர்ட் நிர்வாகத்தில் எவ்வளவு உபாத்தியாயர்கள் வேண்டுமோ அவ்வளவு உபாத்தியாயர்களை நியமித்துக் கொண்டிருக்கிறார்கள். எந்தப் பகுதியில் உபாத்தியாயர்கள் குறைவாக இருக்கிறார்களோ அதை ஜில்லா போர்ட் நிர்வாகிகளின் கவனத்திற்குக் கொண்டு வந்தால் கட்டாயம் நடவடிக்கைகள் எடுத்துக் கொள்வார்கள்.

Sri P. G. MANICKAM: இந்தப் பிரதேசத்தில் வசிப்பவர்கள் 90 சத விகிதம் ஹரிஜன மக்கள்தான். பள்ளிக்கூடத்தில் மிட் டே மீல்ஸ் வழங்க நன்கொடை வசூலிக்க ஒரு திட்டம் போட்டிருப்பதாகத் தெரிகிறது. ஆகவே, அங்கு 90 சத விகிதம் மக்கள் ஹரிஜனங்களாக இருப்பதால் ஹரிஜன இலாகா பண்டில் இருந்து பணம் எடுத்து மத்தியான உணவு எல்லாப் பள்ளிக்கூடங்களிலும் கொடுக்க ஏற்பாடு செய்யப்படுமா ?

Mr. SPEAKER: மூலக் கேள்விக்கும் இதற்கும் சம்பந்தம் இல்லை.

Slums.

* 395 *Q.*—Sri P. G. MANICKAM: Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(*a*) the amount allotted for slum clearance and town-planning schemes in the municipalities and major panchayats in Coimbatore district in 1957–58; and